## எதுவும் பேசக்கூட உரிமையில்லா நிலையில் அமித்ஷாவுடன் அமர்ந்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி!

# பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய துரோகம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கடும் விமர்சனம்!

சென்னை, ஏப்.12–

**ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, அ.தி.மு.க.வுடன் கூட்டணி அறிவிக்கிறார். அருகில் அமர்ந்திருக்கும் எடப்பாடி பழனிசாமி எதுவும் பேச முடியாதநிலையில்இருக்கிறார். பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி என்பது அ.தி.மு.க.வுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எடப்பாடி இழைத்துள்ள மிகப்பெரிய துரோகம் என கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.**



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தமிழ்நாடு மக்களுக்கு இழைக்கக் கூடிய மிகப் பெரிய துரோகமாக அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமைந்து இருக்கிறது. தேர்தலில் இந்த கூட்டணிக்கு மக்கள் தகுந்த பாடத்தை கற்றுத் தருவார்கள்.

பழனிசாமிக்கு பேசக் கூடிய உரிமை கூட இல்லாமல் கூட்டணி அறிவிக்கப் பட்டுள்ளது.

பாஜக அரசு கொண்டுவந்த மக்களுக்கு எதிரான பல்வேறு மசோதாக்களையும், திட்டங்களையும் எதிர்ப்பதாக சொன்னஅ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், உள்துறை அமித்ஷாவுடன் ஒரே மேடையில் மௌனமாக அமர்ந்து, பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை ஆமோதித்து ஏற்றுக் கொண்டதை இன்று பார்க்க முடிந்தது.

அ.தி.மு.க.வுக்கும் தமிழ்நாடு மக்களுக்கும் இழைக்கக் கூடிய மிகப் பெரிய துரோகமாக இந்த கூட்டணி அமைந்து இருக்கிறது.

**முதல்வர் கூறியது உண்மையாகியுள்ளது!**

பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறார்கள் என பலமுறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறி வந்தார்கள். இந்த கூட்டணி மீண்டும் உருவாகும் என்பதை பல முறை சுட்டிக் காட்டி இருந்தார்கள். அது இன்று உண்மை ஆகியிருக்கிறது. இது இன்று பட்டவர்த்தனமாக தெளிவாக தெரிய வந்திருக்கிறது

மக்களை வெகுநாள் ஏமாற்ற முடியாமல், கூட்டணியை இன்று வெளிப்படையாக அறிவிக்கக்கூடிய நிர்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றார்.

அதன் பின்பு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு கனிமொழி கருணாநிதி அளித்த பதில் வருமாறு:-

கேள்வி: தமிழ்மொழிக்கு தி.மு.க. செய்ததை பட்டியலிட முடியுமா என உள்துறை அமைச்சர் அமித்ஷா கேட்கிறாரே?

கனிமொழி கருணாநிதி எம்.பி.: காசி தமிழ்சங்கம் நடத்துகிறோம் என தமிழுக்கு தாங்கள் செய்துள்ள மிகப் பெரிய தொண்டு என சொல்கிறார்கள். தமிழ் மொழி மூலம் காசிக்கு செய்துள்ள நன்மையாகத்தான் இதனைப் பார்க்க வேண்டும். இதனால் தமிழ் எப்படி வளரும் எனத் தெரியவில்லை!

சமஸ்கிருதத்துக்கு 2,400 கோடி ரூபாய் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி செலவு செய்கிறது. ஆனால் தமிழுக்கு 100 கோடி ரூபாய் கூட ஒதுக்குவதில்லை என முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்படி பாரபட்சமாக நடந்து கொள்ள கூடிய ஆட்சிதான் ஒன்றிய ஆட்சி.

தமிழ்நாட்டில் செயல்படும் கேந்திரிய வித்யாலா பள்ளிகளில், தமிழ் பயிற்றுவிக்க ஆசிரியர்களை அமைக்காத ஒன்றிய அரசு, தமிழுக்கு பெரிதாக என்னத் தொண்டு செய்து இருக்கிறது.

பிரதமர் மோடி அவர்கள் சில மேடைகளில் திருக்குறளை சொல்லுவதும் நிதி அமைச்சர் அவர்கள் திருக்குறளை மேற்கோள் காட்டுவதும் தமிழ் வளர்ச்சிக்கான முயற்சியாக எடுத்துக் கொள்ள முடியாது.

இந்தியை திணிப்பதைத்தான் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். மும்மொழி கொள்கை ஆக இருக்கட்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வஃக்பு திருத்தச் மசோதாவாக இருக்கட்டும், நீட் தேர்வாக இருக்கட்டும்; தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய நிதி நிறுத்தப்பட்ட நிலையாக இருக்கட்டும். இது அனைத்தையும் எதிர்த்து குரல் கொடுப்பதாக சொன்ன அதிமுகவின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

**கூட்டணியை ஒருவர் அறிவிக்க கேட்டுக்கொள்ளும் நிலையில் எடப்பாடி!**

சமீபத்தில் சிறுபான்மை மக்களுடன் தான் நிற்பதாக எடப்பாடி பழனிசாமி ஆணித்தரமாக பேசினார். இன்று வஃக்பு மசோதாவை நிறைவேற்றியவருடனே ஒரே மேடையில் அமர்ந்து இருக்கிறார்.

மறைந்த அண்ணா, ஜெயலலிதா அவர்களை எல்லாம் தரக்குறைவாக விமர்சித்த தலைவருடன் ஒரே மேடையில் அமர்ந்து கொண்டு, கூட்டணியை யாரோ ஒருவர் அறிவிக்க அதைக் கேட்டுக் கொண்டு அமர வேண்டிய நிலையில் எடப்பாடி பழனிசாமி தள்ளப்பட்டு இருக்கிறார்.

வழக்கமாக யாரோடு தலைமையில் கூட்டணி அமைகிறதோ அவர் தான் கூட்டணியை அறிவிப்பார். ஆனால் இன்று எடப்பாடி பழனிசாமிக்கு பேசக் கூடிய உரிமை கூட இல்லாமல் கூட்டணி அறிவிக்கப்படுகிறது.

தங்களது தலைவர்களை விமர்சித்தவர்களையே இன்று வீட்டிற்கு விருந்துக்கு அழைக்க வேண்டிய நிலைக்கும் அவர் தள்ளப்பட்டு இருக்கிறார். இப்படி தனது கட்சிக்கும், தமிழ்நாடு மக்களுக்கு செய்து இருக்கக் கூடிய மிகப் பெரிய துரோகம் இது. வரும் தேர்தலில் இந்த கூட்டணிக்கு மக்கள் தகுந்த பாடத்தை கற்றுத் தருவார்கள்.

தமிழ்நாட்டிற்கு எதிராக செயல்படும் பா.ஜ.க.வுக்கும், ஒன்றிய அரசுக்கும் இன்று அ.தி.மு.க. ரத்தின கம்பளத்தை விரித்து இருக்கிறது. இது தான் தமிழ்நாட்டுக்கு அ.தி.மு.க. செய்து இருக்கக் கூடிய மிகப்பெரிய துரோகம்.

**நீட் தேர்வு குறித்து இன்றே அமித்ஷா அறிவிப்பாரா?**

**கேள்வி:** நீட் தேர்வு விவகாரத்தில் அ.தி.மு.க.வுடன் கலந்து பேசி முடிவு எடுப்பதாக அமித்ஷா கூறுகிறாரே?

**கனிமொழி கருணாநிதி:-** முன்பு அ.தி.மு.க.ஆட்சியில் இருக்கும் போது கலந்து பேசி இருக்கலாமே,. இன்றாவது அறிவிக்க சொல்லுங்கள்.

**கேள்வி:** ஊழலை மறைக்கவே மும்மொழி கொள்கை விவகாரத்தை தி.மு.க. கையில் எடுத்து இருப்பதாக குற்றச்சாட்டு குறித்து?

**கனிமொழி கருணாநிதி:** ஒன்றிய பா.ஜ.க. அரசு தான் மும்மொழி கொள்கையை கொண்டு வந்துள்ளனர். அதனை தான் நாம் எதிர்க்கிறோம். என்றுமே இந்தி திணிப்பை எதிர்க்கும் நிலையில், இரு மொழி கொள்கையை மட்டுமே ஏற்போம் என முதலமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்.

நாடு முழுவதும் உள்ள எதிர்கட்சி தலைவர்களை வருமான வரித்துறை அமலாக்கத்துறை, சிபிஐ ஆகியவற்றை கொண்டு ஒடுக்குவதற்காக பயன்படுத்துகிறது ஒன்றிய அரசு.

**அமலாக்கத்துறையை வைத்து மிரட்டப் பார்க்கிறார்கள்!**

யாரெல்லாம் எதிர்த்து பேசினாலும் இந்த நடவடிக்கை தொடர்கிறது. 95 சதவீதம் எதிர்கட்சி தலைவர்கள் மீதே அமலாக்கத்துறை தொடர்பான வழக்கு போடப்படுகிறது. ஆனால் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது 2 சதவீதம் கூட கிடையாது. பாஜக பொய்யான வழக்குகளை தொடுப்பது இதன் மூலம் உறுதியாகிறது.

அதே பாணியில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நம்மையும் மிரட்டி விடலாம் என தப்புக் கணக்கு போடுகிறார்கள். தங்களது ஆட்சியில் செய்யும் தவறுகளை திசை திருப்பவே இது போன்ற வழக்குகளை அவர்கள் தொடுக்கிறார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

### கடலூர் மாவட்டத்தில் செம்மண்டலம்

## அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டுக்கான ஆணை!

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் வழங்கினார்!

கடலூர்,ஏப்.12-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் , கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் , மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் செம்மண்டலம் அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆணையினை நேற்று (11.04.2025) வழங்கினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் அனைவருக்கும் வீடு என்பதன் அடிப்படையில் வீட்டு மனைப்பட்டா இல்லாதவர்களுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்குவதுடன், குடிசை வீட்டில் வசிப்பவர்களுக்கு நிரந்தர கட்டமைப்புடன் கூடிய கான்கிரீட் குடியிருப்பு அமைப்பதற்கு கலைஞர் கனவு இல்லங்கள், விரிவான பழங்குடியினர் குடியிருப்பு இல்லங்கள், சமத்துவபுர இல்லங்கள் என பல்வேறு திட்டத்தின் கீழ் நிரந்தர குடியிருப்பு ஏற்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையிலும், பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமை திட்டம், விடியல் பயணம் திட்டம் போன்ற திட்டங்களும், மாணாக்கர்களின் உயர்கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அனைவருக்கும் வீடு திட்டம் வாயிலாக அடுக்கு மாடி குடியிருப்பு திட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் கடலூர் மாநகராட்சி பனங்காட்டுகாலனி திட்டப்பகுதி I மற்றும் IIஇல் 336 குடியிருப்புகள், செம்மண்டலம் திட்டப்பகுதியில் 272 குடியிருப்புகள், பரங்கிப் பேட்டை ஒன்றியம் அரிய கோஷ்டி திட்டப்பகுதியில் 288 குடியிருப்புகள், பண்ருட்டி வட்டம் காடாம்புலியூர் திட்டப்பகுதியில் 504 குடியிருப்புகள், கிழக்குப்பம் திட்டப்பகுதி I மற்றும் IIஇல் 336 குடியிருப்புகள், பண்ருட்டி நகராட்சி திருவதிகை திட்டப்பகுதியில் 144 குடியிருப்புகள், விருத்தாச்சலம் வட்டம் பாலக்கொல்லை 182 இரட்டை தொகுப்பு வீடுகள் 9 பல்வேறு திட்டப்பகுதிகளில் என மொத்தம் ரூ.205.90 கோடி மதிப்பீட்டில் 2,062 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான நிரந்தர குடியிருப்பினை ஏற்படுத்தி வழங்கிட அரசின் பங்கீட்டுடன் பயனாளிகளின் குறைந்தபட்ச பங்குதொகையுடனும் மாநகரப் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் குடியிருப்பு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்பினை சிறப்பான முறையில் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்வில் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.



அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர், செம்மண்டலம் அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆணையினை நேற்று (11.04.2025) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நிருவாகப் பொறியாளர் க.பாலமுரளிதரன், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

---

### வேடச்சந்தூரில் —

## நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ‘சுற்றுலா மாளிகை’ கட்டப்படும் !

### சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு உறுதி!

சென்னை, ஏப்.12-

“வேடச்சந்தூரில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சுற்றுலா மாளிகை கட்டப்படும்” என, சட்டப் பேரவையில், பொதுப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

எனது வேடச்சந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு எரியோடு பேரூராட்சிக்குட்பட்ட ஒரு ஏக்கர் நிலம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமாக இருக்கிறது. அது பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலே ஆய்வு மாளிகை கட்டப்பட்டு அது மிகப் பழமையான கட்டடமாக இருந்த காரணத்தால் இடிந்து போய் விட்டது. அந்த இடத்திலே சில ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன. அதையெல்லாம் நாங்கள் அகற்றியிருக்கிறோம். எனவே, அந்த



இடத்திலே எங்களுக்கு ஒரு ஆய்வு மாளிகை, ஆய்வு மாளிகை என்று சொன்னால் நாங்கள் பெரியதாக கேட்கவில்லை. மொத்த நிர்வாகத்திற்கு office-க்கு அதே போல ஒரு room இருந்தால்கூட போதும் எங்களுக்கு. அதனால் அந்த இடத்தில் கட்டி ஒரு compound சுவர் கட்ட வேண்டும். மொத்தத்திற்கு 85 இலட்சம் ரூபாய் தான் estimate.

எனவே, அமைச்சரிடத்திலே 2021 ஆம் ஆண்டிலிருந்து நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலனை செய்து இந்த ஆண்டு அதை செய்து தருவதாக கூறியிருக்கின்றார்கள். கண்டிப்பாக இந்த ஆண்டே அதை செய்து தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு பொதுப் பணித் துறையின்கீழ் 109 சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு அவையெல்லாம் பராமரிப்பிலே இருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் காந்தி ராஜன் அவர்கள் குறிப்பிட்டதுபோல அவர் நேரடியாக என்னிடத்திலே சொன்னார். வேடச்சந்தூரிலே நகரின் மையப்பகுதியிலே ஒரு ஏக்கர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. நாம் அதிலே கட்டடம் கட்டவில்லையென்று சொன்னால் தனியார் யாராவது ஆக்கிரமித்து விடுவார்கள். எனவே நெடுஞ்சாலைத் துறையினுடைய சொத்தை காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கட்ட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி பல சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலில்தான் அந்த வேடச்சந்தூரும் இருக்கிறது. அதற்கு இந்த ஆண்டே முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.





காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி.வாலாஜாபாத் பேரூராட்சியில் ரூபாய் 14,80,000 மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையத்தை க. சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன். பி. சேகர். ஆர் கே. தேவேந்திரன். என் பாண்டியன்.கே. தியாகராஜன் செயல் அலுவலர். திருமதி. மாலா. டி. சஞ்சய் காந்தி ஏ வி. சுரேஷ்குமார். சுகுமாரன் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.